MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T121R0

நோயாளி தகவல் கையேடு

# புரோபெனெசிட்

(PROBENECID)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

## உடலில் அளவுக்கு அதிகமான யூரிக் அமிலம் இருப்பதினால் ஏற்படும் கீல்வாதம் (gout), கீல்வாத மூட்டு அழற்சி போன்ற பிரச்சினைகளுக்குச் சிகிச்சை அளிக்க புரோபெனெசிட் (Probenecid) பயன்படுத்தப்படுகிறது. சில ஆன்டிபயோடிக் மருந்துகள் நன்றாக வேலை செய்வதற்கும் இந்த மருந்து உதவுகிறது.

### மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

கீல்வாதத்திற்கு நீங்கள் வேறு மருந்துகள் எடுத்து வந்தாலும், அல்லது இந்த மருந்து உங்களுக்கு வேலை செய்யவில்லை என்று நினைத்தாலும், மருந்தைத் தொடர்ந்து எடுங்கள். ஏனெனில், மருந்தைப் பல வாரங்கள் அல்லது மாதங்களுக்கு எடுத்த பிறகு, கீல்லவாதம் அடிக்கடி தாக்காது மற்றும் வலியும் குறைவாக இருக்கும்.

மருத்துவர் அருந்த வேண்டாம் என்று கூறினாலன்றி, ஒவ்வொரு நாளும் 10 லிருந்து 12 முழு கிளாஸ் திரவ பானங்கள் அருந்துங்கள்.

மருந்தினால் வயிறு பாதிக்காமலிருக்க, மருந்தை உணவு, பால் அல்லது அமில எதிர்ப்பிகளோடு (antacids) உட்கொள்ளுங்கள்.

### மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது ?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருந்து மருந்து எடுங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

### இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகளில் ஏதாவது ஒன்று பாதித்தாலும் மருத்துவரை உடனே அழையுங்கள்:

- வேகமான அல்லது ஒழுங்கற்ற இருதயத் துடிப்பு
- நெஞ்சு வலி 15 நிமிடங்களுக்கு மேல் நீடித்தல்
- மூச்சிழைத்தல் (Wheezing) அல்லது சுவாசிக்கச் சிரமப்படுதல்

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

- கண்கள் அல்லது கண் இமைகளைச் சுற்றி வீங்குதல்
- கடுமையான அரிப்புடன் தோல் தடிப்புகள் தோன்றுதல்
- காரணமில்லாத காய்ச்சல் அல்லது தொண்டைப் புண்
- சிறுநீரில் இரத்தம் காணப்படுதல் அல்லது சிறுநீர் கழிக்கும்போது வலித்தல்

பின்வரும் சாதாரண பக்க-விளைவுகள் ஏற்பட்டால், மருத்துவரைப் பாருங்கள்:

- தலைவலி அல்லது தலைச்சுற்றல்
- குமட்டல் அல்லது வாந்தி
- பசியின்மை
- முகம் திடீரென்று சிவத்தல்.

சில நோயாளிகளுக்கு இரைப்பை அல்லது அடிவயிற்று வலி, வயிற்றுப்போக்கு, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை ஏற்படலாம். சிகிச்சையைத் தொடரும்போது மருந்துக்கு உடல் பழகி, இந்த பக்க-விளைவுகள் குறையலாம். எனினும், பக்க-விளைவுகள் நீண்ட நாட்கள் நீடித்தால் அல்லது தொல்லை கொடுத்தால், மருத்துவரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்.

### நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

நீங்கள் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வந்தால், அல்லது உங்களுக்கு இரத்த, சிறுநீரக நோய்கள் அல்லது இரைப்பைப் புண்கள் இருந்தால், இந்த மருந்தை எடுப்பதற்கு முன்பாக மருத்துவரிடம் சோதியுங்கள்.

உங்களுக்கு நீரிழிவு நோய் இருந்தால், உங்களின் சிறுநீரிலுள்ள சர்க்கரை அளவைச் சோதிப்பதற்கான சில பரிசோதனைகளில் இந்த மருந்தினால் முடிவுகள் சரியாகக் கிடைக்காமல் போகலாம்.

மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/ உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

### மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.